



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.8.2025) செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரத்தில் நடைபெற்ற அரசு விழாவில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் 110 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தாம்பரம் – மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக் கட்டடத்தை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், கழக பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி., பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், ஜி.செல்வம் எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஆர். ராஜா, இ. கருணாநிதி உள்ளிட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி தி. சினேகா, தாம்பரம் மாநகராட்சி மேயர் திருமதி கே. வசந்தகுமாரி, தாம்பரம் மாநகராட்சி ஆணையர் எஸ். பாலசந்தர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.8.2025) தாம்பரத்தில் நடைபெற்ற அரசு விழாவில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் செங்கல்பட்டு மாவட்டத்தில் 110 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தாம்பரம் – மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக் கட்டடத்தை திறந்து வைத்து, தீவிர சிகிச்சை பிரிவு, அறுவை அரங்கம் மற்றும் சி.டி. ஸ்கேன் அறை ஆகியவற்றை பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது, கழக பொருளாளர் டி.ஆர். பாலு, எம்.பி., அமைச்சர்கள் எ.வ. வேலு, தா.மோ. அன்பரசன், மா.சுப்பிரமணியன், ஜி.செல்வம் எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஆர். ராஜா, இ. கருணாநிதி உள்ளிட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி தி. சினேகா, தாம்பரம் மாநகராட்சி மேயர் திருமதி கே. வசந்தகுமாரி, தாம்பரம் மாநகராட்சி ஆணையர் எஸ். பாலசந்தர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.






நேற்று (9.8.2025) செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரத்தில் நடைபெற்ற அரசு விழாவில் கலந்துகொள்ள செல்லும் வழியில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு, பொதுமக்கள் அளித்த உற்சாக வரவேற்பு!

# பிரதமருடன் கனிமொழி கருணாநிதி எம்.பி. சந்திப்பு!

## தூத்துக்குடி தொகுதி வளர்ச்சி குறித்து பேசினார்!



புதுடெல்லி, ஆக. 10–

டெல்லியில் பிரதமர் நரேந்திர மோடியை நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவரும், தூத்துக்குடி மக்களவைத் தொகுதி உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி வெள்ளிக்கிழமை சந்தித்துப் பேசினார்.

நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள பிரதமர் அலுவலகத்தில் இச்சந்திப்பு நடைபெற்றது. சமீப காலமாக பிரதமர் நரேந்திர மோடி பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த எம்.பி.க்களை சந்தித்து வருகிறார்.

இந்த வாரத்தின் தொடக்கத்தில் ம.தி.மு.க. எம்.பி. துரை வைகோ, தேசியவாத காங்கிரஸ் (சரத்பவார்) எம்.பி. சுப்ரியா சுலே உள்ளிட்டோரை பிரதமர் மோடி சந்தித்துப் பேசினார். தொகுதி சார்ந்த விவகாரங்களை பிரதமருடனான சந்திப்பின்போது பேசியதாக அவர்கள் தங்களின் சமூக ஊடகப் பக்கங்களில் குறிப்பிட்டிருந்தனர்.

இந்த வரிசையில் கனிமொழி கருணாநிதி எம்.பி. பிரதமர் மோடி அவர்களை வெள்ளிக்கிழமை சந்தித்துப் பேசியுள்ளார். அவரும் தொகுதி சார்ந்த விஷயத்தை பிரதமரிடம் பேசியதாக தனது ‘எக்ஸ்’ பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அதில், டெல்லியில் பிரதமரைச் சந்தித்து, தூத்துக்குடியில் உள்ள வ.உ.சி துறைமுகத்தில் உள்ள கப்பல் போக்குவரத்து முனையம் உள்பட எனது தொகுதி மற்றும் தமிழ்நாடு தொடர்பான முக்கியப் பிரச்சினைகளை பேசினேன். தூத்துக்குடி விமான நிலையத்தை மேம்படுத்துவதில் பிரதமர் அளித்த ஆதரவிற்கு அவருக்கு நன்றி தெரிவித்தேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

# அரசுப் பணியை தாமதப்படுத்தினால் அடுத்த ‘டெண்டர்’ கிடையாது!

## அமைச்சர் எ.வ.வேலு கண்டிப்பு!



சென்னை, ஆக. 10 –

“கட்டுமானப் பொருட்கள் விலை உயர்வை காரணம் காட்டி, அரசு பணிகளை தாமதப்படுத்தக்கூடாது. அவ்வாறு பணிகளை தாமதப்படுத்தும் ஒப்பந்ததாரர்களுக்கு, அடுத்த பணியை வழங்கக்கூடாது, என, பொதுப் பணித்துறை பொறியாளர்களுக்கு, அமைச்சர் எ.வ.வேலு உத்தரவிட்டார்.

மாநிலம் முழுதும் நடந்து வரும் கட்டுமானப் பணிகளின் முன்னேற்றம் குறித்த ஆய்வுக் கூட்டம், சென்னை சேப்பாக்கத்தில் உள்ள பொதுப் பணித்துறை தலைமை அலுவலகத்தில் நடந்தது. இதில், பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு பேசியதாவது: –

சட்டசபையில் அறிவிக்கப்பட்ட திட்டங்களுக்கு நிர்வாக அனுமதி பெற்று, உடனடியாக பணிகளை துவக்க வேண்டும். நடந்து வரும் பணிகளை விரைவில் முடிக்க, கண்காணிப்பு பொறியாளர்கள் கவனம் செலுத்த வேண்டும். அரசு மருத்துவமனைகள், நீதி மன்றங்கள், சுற்றுலா மாளிகைகள் உள்ளிட்ட இடங்களில், பழைய, ‘லிப்ட்’ களை சீரமைக்க வேண்டும். ‘லிப்ட்’ இல்லாத இடங்களில், புதிதாக அமைக்க வேண்டும்.

பருவமழை காலத்தை முன்னிட்டு வெள்ளத் தடுப்பு, பழைய கட்டடங்களை அகற்றுதல், தாழ்வான பகுதிகளில் தேங்கும் மழைநீரை, ‘பம்ப் செட்’ வாயிலாக அகற்றுதல் போன்ற பணிகளை செய்வதற்கு உரிய ஏற்பாடுகளை செய்ய வேண்டும்.

கட்டுமானப் பொருட்கள் விலை உயர்வை காரணம் காட்டி பணிகளை தாமதப்படுத்தக்கூடாது. அவ்வாறு பணிகளை தாமதப்படுத்தும் ஒப்பந்ததாரர்களுக்கு, அடுத்த பணியை வழங்கக்கூடாது.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு பேசினார்.





மாவட்ட செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் ஜோசப்சாமுவேல் எம்.எல்.ஏ. தலைமையில் சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க., அம்பத்தூர் வடக்கு பகுதி சார்பில், ஆகஸ்ட் 7 முத்தமிழறிஞர் 7–ஆம் ஆண்டு நினைவு நாள் “போராளி ஓய்வதில்லை நினைவை போற்றி” மாபெரும் பொதுக்கூட்டத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் எம்.பி., திராவிட இயக்க தமிழர் பேரவைத் தலைவர் சுப. வீரபாண்டியன், காங்கிரஸ் பேரியக்க மூத்த தலைவர் பீட்டர் அல்போன்ஸ் ஆகியோர் உரையாற்றினர்.





சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலாப்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கழக நிர்வாகிகளின் ஆலோசனைக் கூட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. கலந்துகொண்டு, கழக நிர்வாகிகளுக்கு பல்வேறு ஆலோசனைகள் வழங்கிப் பேசினார். மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. உடன் உள்ளார்.